DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST (POA) ACT 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 25/2023**

அ.சா. 12

Prosecution witness
(Witness examined through video conferencing in accordance with Madras High Court video conferencing Rules 2020)

| | | | |
|---|---|---|---|
| Name: | திருமதி. சிதம்பர குமாரி | Caste: | |
| Husband Name: | விக்னேஷ் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 33 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025.

( 3,4 எதிரிகள் ஆஜர். 1,2 எதிரிகள் ஆஜர்படுத்தப்படவில்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர். )

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சேலம் மாவட்டம் வாலப்பாடி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2020ம் வருடம் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபரிந்தபோது 07.08.2020ம் தேதி இரவு 9-10.00 மணியளவில் 65 வயது மதிக்கத்தக்க கமுதி தாலுகா கே. பாப்பாங்குளம் கிராமத்தை சேர்ந்த கருப்பணன் மகன் பூமிநாதன் என்பவர் சிகிச்சைக்காக அவரது மருமகன் ராஜசேகரன் என்பவரால் அழைத்து வரப்பட்டார். மேற்படி பூமிநாதன் சிகிச்சைக்கு அழைத்து வரப்படும்போது சுயநினைவுடன் இருந்தார். அவர் தன்னை தெரிந்த நான்கு நபர்கள் கூர்மையான ஆயுதத்தால் அதே தினம் மாலை 6.45 மணியளவில் சின்னஓடை அருகே வைத்து தாக்கியதாகவும் அங்கிருந்து கமுதி அரசு

C MOHAN RAM
Digitally signed by C MOHAN RAM
Date: 2025.11.24 11:47:21 +0530

மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டடு அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும் கூறினார். அவரை பரிசோதிக்கையில் 3x3x3 cm அளவில் வலது முன்கையில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவனைக்கு பரிந்துரை செய்தேன். மதுரை இராஜாஜி அரசு மருத்துவனையில் வழங்கப்பட்ட சிகிச்சை ஆவணங்களின் அடிப்படையில் அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.7**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காயம்பட்ட பூமிநாதன் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் சிகிச்சையில் இருந்தார் என்றால் ஒரு மணிநேரம் இருந்திருப்பார். காயம்பட்ட பூமிநாதனுக்கு நான் முதலுதவி சிகிச்சை மட்டும்தான் வழங்கினேன் என்றால் சரிதான். காயம்பட்ட பூமிநாதனுக்கு மதுரையில் சிகிச்சை வழங்கிய மருத்துவர்தான் காயத்தின் தன்மை பற்றி கூறமுடியும் என்றால் சரிதான். நான் சிகிச்சை அளிப்பதற்கு முன்பாகவே காயம் கொடுங்காயம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| Tmt. K.R. Sujatha,<br>Superintendent, Junior Scientific Officer,<br>Mahila Court, (District Judge Level)<br>Salem. | Tmt. C. Malaikolunthi,<br>Assistant,<br>PCR Court,<br>Ramanathapuram. |

Co coordinator Remote site — Deponent — Co coordinator Court site

C MOHAN RAM — Digitally signed by C MOHAN RAM Date: 2025.11.24 11:47:28 +0530